கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு

2016 / 2017 (ஏப்ரல் - 2019)

**HYS 2113 History of South Asia from 6th Century BC to AD 1206**

**HYS 2113 தென்னாசிய வரலாறு கி.மு ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. 1206 வரை**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி - I

1. வேதகாலத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

   அ) இருக்கு வேதகால பொருளாதார நிலையை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) பிற்பட்ட வேதகாலத்தில் வர்ண வேறுபாடு பற்றிய சிந்தனையில் ஏற்பட்ட விரிவாக்கம் பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

2. "புராதன கால இந்தியாவுடன் ஏற்பட்ட வெளிநாட்டுத் தொடர்புகள் அந்நாட்டில் அரசியல், சமூகம், பொருளாதாரம் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தின." இக்கூற்றின் அடிப்படையில் மேல்வருவனவற்றை ஆராய்க.

   அ) இந்தியாவுடனான கிரேக்க நாட்டுத் தொடர்புகள் (10 புள்ளிகள்)

   ஆ) இந்தியாவுடனான பாரசீக நாட்டுத் தொடர்புகள் (10 புள்ளிகள்)

3. தமிழகத்தில் பல்லவரின் ஆட்சிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

   அ) பல்லவர் கலைப் படைப்புக்கள் (10 புள்ளிகள்)

   ஆ) முதலாம் நரசிம்மவர்மனின் போர் நடவடிக்கைகள் (10 புள்ளிகள்)

## பகுதி - II

4. பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு தமிழகத்தில் கண்டறியப்பட்ட அக்காலப் பண்பாடு பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

5. புராதன இந்திய சிந்தனையில் அரசின் உருவாக்கம் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

6. "அகில இந்தியப் பேரரசை ஏற்படுத்தக் கனவு கண்டு, அதனை ஓரளவு நடைமுறைக்கு கொண்டுவந்து ஒன்றுபட்ட இந்தியாவை உண்டாக்கியவன் சமுத்திர குப்தனாவான்." ஆர்.சி.மஜும்தாரின் இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

7. குசானர் காலத்தில் பௌத்த சமயம் வளர்ச்சியடைந்தமை பற்றிக் குறிப்பிட்டு, அச்சமயத்துடன் இணைந்து வளர்ந்த காந்தாரக் கலைமரபு பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)